भारत का राजपत्र

# The Gazette of India

इंदिय அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, मंगलवार, 20, अकटोबर 1998/1920 सका

New Delhi, Tuesday 20th October 1998/1920 Saga

புது தில்லி, 1998 அக்டோபர் 20ஆம் நாள் செவ்வாய்க்கிழமை/1920 சக

## Ministry of Law, Justice and Company Affairs

(Legislative Department)

New Delhi, the 20th October 1998

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

(சட்டமியற்றுத் துறை)

புது தில்லி, 20 அக்டோபர் 1998

The translation in Tamil of the Registration of Births and Deaths Act, 1969 (18 of 1969), The Medical Termination of Pregnancy Act, 1971 (34 of 1971), The Voluntary Surrender of Salaries (Exemption from Taxation) Act, 1961 (46 of 1961), The Excise (Malt Liquors) Act, 1890 (13 of 1890), The Government Buildings Act, 1899 (4 of 1899), The Indian Easements Act, 1882 (V of 1882), The Personal Injuries (Compensation Insurance) Act, 1963 (37 of 1963), The Provisional Collection of Taxes Act, 1931 (16 of 1931), The Marriages Validation Act, 1892 (2 of 1892), The River Boards Act, 1956 (49 of 1956), The Telegraph Wires (Unlawful Possession) Act, 1950 (74 of 1950), The Commissions of Inquiry Act, 1952 (60 of 1952), The Indian Statistical Institute Act, 1959 (57 of 1959), The Legal Tender (Inscribed Notes) Act, 1964 (28 of 1964), The Payment of Wages Act, 1936 (4 of 1936), The Citizenship Act, 1955 (57 of 1955), are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம், 1969 (18/1969), கருவுற்றிருத்தலை மருத்துவ முறையில் கலைப்பதற்கான சட்டம், 1971 (34/1971), தம் விருப்பாக வரையூதியங்களை ஒப்புவித்துவிடுதல் (வரி விதிப்பிலிருந்து விலக்களிப்பு) சட்டம், 1961 (46/1961), (மாத்தேறல்கள்) ஆயச் சட்டம், 1890 (13/1890), அரசாங்கக் கட்டடங்கள் சட்டம், 1899 (4/1899), இந்திய வசதியுரிமைகள் சட்டம், 1882 (V/1882), உடலூறுகள் (சரியீட்டுக் காப்பீடு) சட்டம், 1963 (37/1963), தாற்காலிகமாக வரிகள் தண்டுதல் சட்டம், 1931 (16/1931), திருமணங்களைச் செல்லுந்தன்மையுடையனவாக்குதல் சட்டம், 1882 (2/1882), ஆற்றுவாரியங்கள் சட்டம், 1956 (49/1956), தந்திக் கம்பிகள் (சட்டமுரணான உடைமை) சட்டம், 1950 (79/1950), விசாரணை ஆணையங்கள் சட்டம், 1952 (60/1952), இந்தியப் புள்ளியியல் சட்டம், 1959 (57/1959), சட்டச் செலாவணி (பொறிக்கப்பட்ட பணத்தாள்கள்) சட்டம், 1964 (28/1964), கூலிகொடுத்தல் சட்டம், 1936 (4/1936), குடிமைச் சட்டம், 1955 (57/1955), ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன் மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price Rs. 74.00

# கருவுற்றிருத்தலை மருத்துவ முறையில் கலைப்பதற்கான சட்டம், 1971

*(சட்ட எண் 34/1971)*

[1971, ஆகஸ்டு 10]

பதிவுபெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர்களால் குறித்தசில கருவுற்றிருத்தல்களைக் கலைப்பதற்காகவும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதன் சார்வுறு பொருட்பாடுகளுக்காகவும் வகைசெய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் இருபத்திரண்டாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், கருவுற்றிருத்தலை மருத்துவ முறையில் கலைப்பதற்கான சட்டம், 1971 என்று வழங்கப்பெறும்.

(2) இது ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியன்று செல்லாற்றல் பெறும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) "காப்பாளர்" என்பது, உரிய வயது அடையாத அல்லது பித்தர் ஒருவரைக் கவனிப்பில் கொண்டிருக்கிறவர் என்று பொருள்படும்;

4/1912 (ஆ) "பித்தர்" என்பது, இந்தியப் பித்துநிலைச் சட்டம், 1912 இன் பிரிவு 3 இல் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பொருளை உடையதாகும்;

9/1875 (இ) "உரிய வயது அடையாதவர்" என்பது, இந்திய முதிர்மைச் சட்டம், 1875 இன் வகையங்களின்படி எவர் ஒருவர் தம்முடைய முதிர்மையை அடையாது இருக்கிறவராகக் கொள்ளப்படுகிறதோ அவர் என்று பொருள்படும்;

102/1956 (ஈ) "பதிவுபெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர்" என்பது, இந்திய மருத்துவ மன்றச் சட்டம், 1956 இன் பிரிவு (2)இன் கூறு (ஏ) இல் பொருள்வரையறை செய்யப்பட்டவாறான ஏற்பளிக்கப்பட்ட மருத்துவத் தகுதிப்பாடு எதையும் கொண்டிருக்கிறவரும் ஒரு மாநில மருத்துவப் பதிவேட்டில், தம்முடைய பெயர் பதிவு செய்யப்பட்டிருக்கிறவரும், மற்றும் மகளிர் நோய் மருத்துவயியல் மற்றும் மகப்பேறு மருத்துவத்துறையில் இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளால், வகுத்துரைக்கப்படலாகும் பட்டறிவையும் பயிற்சியையும் கொண்டிருக்கிறவருமான ஒரு மருத்துவத் தொழிலாற்றுநர் என்று பொருள்படும்.

பதிவுபெற்ற மருத்துவத் தொழில் ஆற்றுநர்களால் கருவுற்றிருத்தல்கள் எப்போது கலைக்கப்படலாம்

45/1860 3. (1) இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு இணங்க ஒரு பதிவுபெற்ற மருத்துவத் தொழிலாற்றுநரால் கருவுற்றிருத்தல் எதுவும் கலைக்கப்படுமாயின், அவர் அந்தச் சட்டத்தின்படியோ அஃபோதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதன்படியோ குற்றச்செயல் எதனையும் புரிந்தவராகக் கொள்ளப் பெறமாட்டார்.

(2) உட்பிரிவு (4)இன் வகையங்களுக்கு உட்பட்டு ஒரு கருவுற்றிருத்தலானது பதிவு பெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர் ஒருவரால்,—

(அ) கருவுற்றிருத்தலின் காலஅளவு பன்னிரண்டு வாரங்களுக்கு மேற்படாது இருக்குமிடத்து அந்த மருத்துவத் தொழிலாற்றுநர், அல்லது

(ஆ) கருவுற்றிருத்தலின் காலஅளவு பன்னிரண்டு வாரங்களுக்கு மேற்பட்டிருந்து, ஆனால், இருபது வாரங்களுக்கு மேற்படாது இருக்குமிடத்து, பதிவுபெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர்கள் இருவருக்குக் குறையாதவர்கள்,—

இந்தியா
தலைமை
பதிவாள

(i) அந்தக் கருவுற்றிருத்தல் தொடர்ந்து இருந்து வருதல் கருவுற்ற பெண்ணின் உயிரை இடர்நேர்வுக்கு உள்ளாக்கக்கூடும் அல்லது அவளது உடல் அல்லது மனநலத்தைக் கடுமையான கேட்டிற்கு உள்ளாக்கக் கூடும் என்று, அல்லது

(ii) அந்தக் குழந்தை பிறக்குமேயாயின், அது கடுமையாக ஊனமுறுமாறு, உடல் அல்லது மனத்தின் இயல்புக்கு மாறான தன்மையால் துன்புறுவதற்குப் பெருமளவில் இடர்நேர்வு இருக்கிறது என்று

நல்லெண்ணத்துடன் கருதுவார்களாயின், கலைக்கப்படலாம்.

விளக்கம் I.—கருவுற்றிருத்தல் எதுவும் வன்புணர்ச்சியால் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அந்தக் கருவுற்ற பெண்ணால் வாதிட்டுச் சொல்லப்படுமிடத்து, அவ்வாறு கருவுற்றதனால் ஏற்பட்ட வேதனையானது, அந்தக் கருவுற்ற பெண்ணின் மனநலத்திற்குக் கடுமையான கேட்டினைத் தரும் வகையில் அமைத்திருப்பதாகத் துணிபு கொள்ளப்படுதல் வேண்டும்.

முதன்மை
பதிவாள

விளக்கம் II.—திருமணமான பெண்ணால் அல்லது அவருடைய கணவரால் குழந்தைகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட வழி அல்லது முறை எதன் தவறுகையின் விளைவாகவும் கருவுற்றிருத்தல் எதுவும் ஏற்பட்டிருக்குமிடத்து, அத்தகைய வேண்டாத கருவுற்றிருத்தலால் ஏற்பட்ட வேதனையானது, அந்தக் கருவுற்ற பெண்ணின் மனநலத்திற்குக் கடுமையான கேட்டினைத் தரும் வகையில் அமைந்திருப்பதாக துணிபு கொள்ளப்படலாம்.

(3) கருவுற்றிருத்தல் ஒன்று தொடர்ந்து இருந்து வருதல் உட்பிரிவு (2)இல் குறிப்பிடப்பட்டவாறு உடல்நலத்துக்குக் கேடு உண்டாக்கும் இடர்நேர்வுக்கு உள்ளாக்குமா என்று தீர்மானிப்பதில், அந்தக் கருவுற்ற பெண்ணின் உள்ளபடியாகவே அல்லது தாமாகவே முன்னதாக அறிந்துகொள்ளக்கூடிய சூழமைவுகள் கவனத்தில் கொள்ளப்படலாம்.

(4) (அ) பதினெட்டு வயது நிறைவு பெறாத அல்லது பதினெட்டு வயது நிறைவுற்றிருந்து பித்தராய் இருக்கிற பெண் ஒருத்தியின் கருவுற்றிருத்தல் எதுவும் அவளுடைய காப்பாளரின் எழுத்து வடிவிலான இசைவுடன் தவிர, கலைக்கப்படுதல் ஆகாது.

(ஆ) கூறு (அ) இல் பிறவாறாக வகைசெய்யப்பட்டவாறல்லாமல், கருவுற்றிருத்தல் எதுவும், கருவுற்ற பெண்ணின் இசைவுடன் தவிர, கலைக்கப்படுதல் ஆகாது.

கருவுற்றிருத்தல் எந்த இடத்தில் கலைக்கப் படலாம்.

4. கருவுற்றிருத்தலின் கலைத்தல் எதுவும், இந்தச் சட்டத்திற்கிணங்க,—

(அ) அரசாங்கத்தினால் நிறுவப்பட்டுள்ள அல்லது பேணப்பட்டுள்ள மருத்துவமனையாக, அல்லது

பதிவுக்
கோட்ட

(ஆ) இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக அரசாங்கத்தினால் அப்போதைக்கு ஒப்பேற்பளிக்கப்பட்ட இடமாக,

இல்லாத இடம் எதிலும் செய்யப்படுதல் ஆகாது.

மாவட்ட
பதிவாள

பிரிவுகள் 3 மற்றும் 4 எப்போது பொருந்தா திருத்தல்.

5. (1) பிரிவு 4 இன் வகையங்களும் கருவுற்றிருத்தலின் காலத்தையும் பதிவுபெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர்களில் இருவருக்குக் குறையாதவர்களின் கருத்தையும் பொறுத்ததாக இருக்கிற அளவுக்குப் பிரிவு 3 இன் உட்பிரிவு (2)இன் வகையங்களும், பதிவு பெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர் ஒருவர், கருவுற்ற பெண்ணின் உயிரைக் காப்பாற்றுவதற்கு, அத்தகைய கருவுற்றிருத்தலின் கலைத்தல் உடனடியாகத் தேவைப்படுகிறது என்று நல்லெண்ணத்துடனான கருத்தைக் கொள்கிற நேர்வில் அவரால் செய்யப்பட்ட கருவுற்றிருத்தலின் கலைத்தலுக்கும் பொருந்தாது.

45/1860 (2) இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், பதிவுபெற்ற மருத்துவத் தொழிலாற்றுநராக இல்லாத ஒருவரால் செய்யப்பட்ட கருவுற்றிருத்தலின் கலைத்தலானது அந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படத்தக்க ஒரு குற்றச்செயலாகும்; மற்றும் அந்தச் சட்டம் அந்த அளவுக்கு மாற்றமைவு செய்யப்பட்டதாகிவிடும்.

விளக்கம்.—இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, பிரிவு 2 இன் கூறு (ஈ)இன் வகையங்கள் பதிவுபெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர் ஒருவரால், மகளிர்நோய் மருத்துவ இயல் மற்றும் மகப்பேறு மருத்துவத் துறையில் பட்டறிவு அல்லது பயிற்சியைப் பெற்றிருத்தல் தொடர்பாகப் பொருந்தாது.

6. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கைவாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்கான விதிகளை வகுக்கலாம். விதிகளை வகுப்பதற்கு அதிகாரம்.

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப் பாங்குக்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகைசெய்யலாம், அவையாவன:—

(அ) பதிவுபெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர் ஒருவர் இந்தச் சட்டத்தின்படி கருவுற்றிருத்தல் எதையும் கலைக்கக் கருதுவாராயின், அவர் பெற்றிருக்க வேண்டிய பட்டறிவு அல்லது பயிற்சி அல்லது இரண்டும்; மற்றும்

(ஆ) இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளால் வகை செய்ய வேண்டுறுத்தப்படுகிற அல்லது வகை செய்யப்படலாகிற பிற பொருட்பாடுகள்.

(3) இந்தச் சட்டத்தின்படி, மைய அரசாங்கத்தால் வகுக்கப்படும் ஒவ்வொரு விதியும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில் நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது ஒரு கூட்டத்தொடராகவோ இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்களைக் கொண்ட ஒரு காலஅளவுக்கு அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மேலும், அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது உடனடியாகத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின் அல்லது அந்த விதி வகுக்கப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு, அந்த விதி, அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாதுபோகும்; எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லந்தனைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

7. (1) மாநில அரசாங்கம், ஒழுங்குறுத்தும் விதிகள் வாயிலாக.— ஒழுங்குறுத்தும் விதிகளை வகுப்பதற்கு அதிகாரம்.

(அ) பிரிவு 3 இன் உட்பிரிவு (2)இல் சுட்டப்பட்டவாறான அத்தகைய கருத்து எதுவும், தொடர்புடைய ஒரு பதிவுபெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர் அல்லது மருத்துவத் தொழிலாற்றுநர்களால், ஒழுங்குறுத்தும் விதிகளில், குறித்துரைக்கப்படலாகும், படிவத்திலும் காலத்திலும் உறுதிச்சான்றளிக்கப்படவேண்டும் என்று வேண்டுறுத்தலாம்; மற்றும் அத்தகைய உறுதிச்சான்றிதழ்களைப் பாதுகாப்பாக வைக்கும்படியோ அப்புறப்படுத்தும்படியோ வேண்டுறுத்தலாம்;

(ஆ) கருவுற்றிருத்தல் ஒன்றைக் கலைக்கிற பதிவுபெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர் எவரையும், அத்தகைய முடிவுறுத்தல் பற்றிய செய்தியையும், அந்தக் கலைத்தல் தொடர்பாக அத்தகைய ஒழுங்குறுத்தும் விதிகளில் குறித்துரைக்கப்படலாகிறவாறான பிற தகவலையும் கொடுப்பதற்கு வேண்டுறுத்தலாம்;

(இ) அத்தகைய ஒழுங்குறுத்தும் விதிகளில் குறித்துரைக்கப்பட்டாகிறவர்களுக்கும் மற்றும் அத்தகைய நோக்கங்களுக்காகவும் தவிர, அத்தகைய ஒழுங்குறுத்தும் விதிகளை ஒட்டிக்கொடுக்கப்பட்ட தகவல்கள் அல்லது அளிக்கப்பட்ட செய்தி வெளியிடப்படுவதைத் தடைசெய்யலாம்.

(2) உட்பிரிவு (1) இன் கூறு (ஆ) இன் காரணமாக வகுக்கப்பட்ட ஒழுங்குறுத்தும் விதிகளை ஒட்டிக் கொடுக்கப்பட்ட தகவல் மற்றும் அளிக்கப்பட்ட செய்தி மாநிலத்தின் தலைமை மருத்துவ அதிகாரிக்கும் கொடுக்கப்படுதல் அல்லது, நேர்வுக்கேற்ப, அளிக்கப்படுதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) இன்படி வகுக்கப்பட்ட ஒழுங்குறுத்தும் விதி எதனின் வேண்டுறுத்தல்களை வேண்டுமென்றே மீறுகிற அல்லது அதற்கிணங்கி நடக்க வேண்டுமென்றே தவறுகிறவர் எவரும், ஆயிரம் ரூபாய்வரை நீடிக்கலாகும் அபராதம் விதித்துத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாவார்.

நல்லெண்ணத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

8. இந்தச் சட்டத்தின்படி நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதனாலும் விளைவிக்கப்பட்ட அல்லது பெரும்பாலும் விளைவிக்கப்படக்கூடிய சேதம் எதற்காகவும், பதிவுபெற்ற மருத்துவத் தொழிலாற்றுநர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு எதுவும் அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எவையும் தொடரப்படுதல் ஆகாது.